அறிமுக நூல் – 5

# சிறுபாணாற்றுப்படை



இரா.இளங்குமரனார்

அறிமுக நூல் வரிசை – 5

# சிறுபாணாற்றுப்படை

இரா. இளங்குமரன்

# அறிமுகத்திற்கு அறிமுகம்

தொடக்க நாளிலேயே 'செந்தமிழ்' எனப்பட்ட நம்மொழி, இப்பொழுது 'செம்மொழி' என்னும் சிறப்பை நடுவண் அரசால் அடைந்திருக்கிறது. அத் தகுதிக்குக் காரணமாக இருந்த நூல்களை எல்லாம் இளம்பருவ மாணவர்களும், ஓரளவே தமிழ்ப் பயிற்சியுடைய பெரியவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் 'அறிமுகநூல்கள்' வெளியிட வேண்டும் என்று அவாவினார், அன்புத் தோன்றல், செயல்வீறுமிக்க தன்மானத் தமிழர், புரட்சிக் கவிஞர் மன்ற நிறுவனர் தமிழ்த்திரு **பி.வரதராசனார்**. அவர் விருப்பை நிறைவேற்றும் வகையிலும், என் எண்ணப்பதிவும் அதில் ஒன்றியதாலும், தொடர்ந்து செம்மொழிக்கு உரியவும் பிறவகையால் தமிழ்வளமாவதுமாம் கலை வள நூல்களையும் அறிமுக நூல்களாக வெளியிட இசைந்தேன்.

அவ்வரிசையில் தொல்காப்பியம், திருக்குறள், திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை என்பவற்றை அடுத்துச் செம்மொழி நூல்வரிசையுள் ஐந்தாவதாக வெளிவருவது இச் சிறுபாணாற்றுப்படை. பத்துப்பாட்டின் வரிசையில், மூன்றாம் இடத்தைப் பெற்றது இது. ஆற்றுப்படை வரிசையிலும், மூன்றாம் இடத்தை பெற்றதும் இது.

முன்னைத் தொல்காப்பிய, திருக்குறள் அறிமுக நூல்கள் பெற்ற வரவேற்பும், அவ்வெளியீட்டில் கண்ட விற்பனைப் பெருக்கமும், பருகுவார் போல் கேட்ட அவையச் சிறப்பும், பரப்புதல் உந்துதல் அவர்களுக்கு உண்டாகிய தமிழ்ப்பயனும், நூலாசிரியனுக்கும், வெளியீட்டினர்க்கும் பேருவகை ஆவதாம்! 'தமிழ்மொழி' 'இனமீட்பர் பெருகுவர்' என்னும் நம்பிக்கையைப் பெருக்குதல் நற்பேறாம். ஆதலால், இத்தொடர் தொய்வின்றித் தொடர்வதுடன், பெருக்கத் தொடராகச் சிறக்கத் தூண்டும் என்பதும் உறுதியாம்.

பரப்பாளர் என்பார், புரப்பாளருமாம் சிறப்பு வெளிப்பாடு இஃதாம்.

வாழிய நலனே!

வாழிய நிலனே!


இன்ப அன்புடன்,

**இரா.இளங்குமரன்**

திருவள்ளுவர் தவச்சாலை,

அல்லூர், திருச்சி-620 101

வெளியிட்டு மகிழும்




புரட்சிக் கவிஞர்
மன்றம்

75, வடக்குமாசி வீதி, மதுரை-1
அலைப்பேசி : 94437 10219

## அச்சிட்டு மகிழும்






# மணியம்மை

## மழலையர் தொடக்கப்பள்ளி

வடக்குமாசி வீதி, மதுரை–1

தொலைப்பேசி : 0452 2626111

# சிறுபாணாற்றுப்படை

**★ சிறுபாணர், பாணருள் ஒருவகையினரா?**

இல்லை; தெரு நீள அகலம் கொண்டும், தெருவின் திசை கொண்டும் பெரிய தெரு, சின்ன தெரு, தெற்குத் தெரு, வடக்குத் தெரு என்பது போலவும்,

பெரியகடை வீதி, சின்ன கடை வீதி

என்பது போலவும், சிறிய யாழ், பெரிய யாழ் என்பவை வைத்து இசைத்தலைக் கருதிய பெயரியது இது.

எ-டு: சின்னமேளம், பெரிய மேளம்

பாடல் அடி அளவாலும், இப்பெயர்கள் பொருந்துவ ஆயின என்பது, மற்றொரு சிறப்பு.

**★ பத்துப்பாட்டில் சிறுபாணாற்றுப்படை பெற்ற இடம் எது?**

பத்துப்பாட்டின் வரிசையில், மூன்றாம் இடத்தைப் பெற்றது இது.

ஆற்றுப்படை வரிசையிலும், மூன்றாம் இடத்தைப் பெற்றதும் இது.

**★ சிறுபாணாற்றுப் படையின் பாட்டுடைத் தலைவன் எவன்? அவனைப் பற்றி அறியும் செய்திகள் எவை?**

பாட்டுடைத் தலைவன் ஓய்மான் நாட்டு நல்லியக் கோடன் என்பான். இவன் குடி, ஓவியர் குடி எனப்படும். சென்னைப் பகுதியாக விளங்கும் கோடம்பாக்கம் என்பது, நல்லியக் கோடன் பெயரை நினைவுபடுத்தும். இவன் இசை வல்லான் என்பதும் பெரும்புகழும் கொடையும் உடையவன் என்பதும் இவன் பெயராலும், இந்நூலாலும் இனிது விளங்கும். ஓய்மான் நாடு என்பது **'திண்டிவனம்'** பகுதியாம். கோடன் தலைநகர் **'மாவிலங்கை'** என்பது, ஆவியர் என்னும் குடிபோல்வது ஓவியர் குடி என்பதும் ஆம்.

★ **சிறுபாணாற்றுப்படையை இயற்றிய புலவர் யார்? அவரைப் பற்றி அறிவன எவை?**

சிறுபாணாற்றுப்படையை இயற்றியவர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் என்பார். இவர் நாடு 'இடைக்கழிநாடு' என்பதும், ஊர் 'நல்லூர்', என்பதும், பெயர் 'நத்தத்தனார்' (நற்றத்தத்தனார்) என்பதும் இவர் பெயரால் விளங்கும். இவர் பாடிய காலம் கி.பி. 70 – 90 என்பார் அறிஞர் **ந.சி.கந்தையா.**

ஒரு வீட்டின் முற்பகுதிக்கும் பிற்பகுதிக்கும் ஊடே நடைவழியாக இருக்கும் பகுதிக்கு **இடைக்கழி** என்பது பெயர். அது 'டேழி', 'ரேழி' என மக்கள் வழக்கில் உள்ளது. அவ்வாறு, ஒரு நாட்டில் இருந்து மற்றொரு நாட்டுக்குச் செல்ல இடைவழியாக அமைந்தது 'இடைக்கழி நாடு' எனப்பட்டிருக்கலாம்.

ஓர் ஏரியில் இருந்து மற்றோர் ஏரிக்கு நீரைச் செலுத்த இடைப்பட அமைந்த ஏரி, 'ஓட்டேரி' எனப்படுதல் உண்டு. சென்னைப் பகுதியில் உள்ளது அது. "இடைக்கழி நாடென்பது, சென்னைக்குத் தென்மேற்கில் உள்ள ஒரு சிறுநாடு; இக்காலத்தும் இந்நாடு இப்பெயராலேயே வழங்கப்படுகின்றது. இஃது **உப்பங் கழிகளுக்கு இடையே இருத்தலின்,** இப்பெயர் பெற்றது போலும்; இதிலுள்ள ஊர்கள் பலவற்றுள் நல்லூர் என்று ஓர் ஊர் இருக்கின்றது. அதுவே இவருடைய ஊராக இருத்தல் வேண்டும்" என்கிறார் **உ.வே.சாமிநாதையர்.**

★ **நல்லியக் கோடனைப் பாடிய வேறு புலவர் உளரா? உளராயின் அவர் யார்? அவர் பாடிய செய்தி என்ன?**

நல்லியக் கோடனைப் பாடிய புலவர் ஒருவர் உளர். அவர், **புறத்திணை நன்னாகனார்** என்பார்.

நன்னாகனார், நல்லியக் கோடன் ஆட்சி செய்த நாட்டிலேயே இருந்தவர். ஆயினும், அதுவரை அவன் கொடைத்திறம் அறிந்து பாடினார் அல்லர். ஒருகால் அவனைக் கண்டபோது, அவன் வழங்கிய கொடைக்கு மகிழ்ந்து தம் நெஞ்சுக்குக் கூறுவாராய், "நெஞ்சே, **பாரி வள்ளலின் பறம்புமலைப்** பனிச் சுனை நீரின் அருமையை,

அவ்வூரார் அறியாமைபோல், யானும் நல்லியக் கோடனை இது காறும் அறியாது இருந்தேன்; என் நற் பேற்றால், இன்றுகண்டேன்; அவனைக் காணாமல் கழிந்துபோன நாள்களுக்காக வருந்துகிறேன்" என்னும் பொருளமையப் பாடினார்.

இவர், "பெருமா விலங்கைத் தலைவன் சீறியாழ்
இல்லோர் சொல்மலை நல்லியக் கோடன்"

என்பதால், சிறுபாணாற்றுப்படை பாடப் பெற்றபின்னர், நல்லியக் கோடனைக் கண்டு பாடியவராகலாம் எனக் கருத இடமுண்டு. இல்லோர் சொல்மலைவறியவர் பாடும் மலையன்ன மாண்பினன்.

நன்னாகனார் பெயரை நோக்க, அவர் புறப்பாடல் பாடுதலில் வல்லார் என்பது வெளிப்படை. ஆயினும், அவர் பாடிய பாடலாகக் கிடைத்தது ஒரு பாடல் மட்டுமே (புறம்.176)

### ★ நிலமகளை நத்தத்தனார் எவ்வாறு கூறுகிறார்?

நிலத்தை மகளாகக் கூறும் நத்தத்தனார், மலைகளை மார்புகளாகவும், பிரிந்து இடைவெளிபடச் செல்லும் காட்டாற்றை, அவள் மாலையாகவும் கூறுகிறார்.

### ★ பாணர் செல்லும் வழி பற்றி அறிவன எவை?

"பாணர் செல்லும் வழி வெப்பமிக்கது; பரல் கல்கள் பரவிக் கிடப்பது; நடப்பவர் கால்களைக் கிழிக்கும் கூர்மையது; இடையே தங்குதற்குக் கடம்ப மரம் உண்டு; காலையும் மாலையும் கூட நண்பகல் போல வெயில் வாட்டும்; கிணறுகளிலும் நீர் வறண்டுபோய்க் கிடக்கும். பறவைகளும் விலங்குகளும் வெப்பத்தாலும் நீர் நிழல் இன்மையாலும் துன்புறும்" என்பன பாணர் செல்லும் வழி பற்றி அறிவனவாம்.

★ **பாணன் மனைவியாம் விறலியைப் பற்றி, ஆசிரியர் என்ன கூறுகிறார்?**

வழிநடந்த களைப்பால் விறலி கடம்ப மர நிழலில் தங்கியுள்ளாள். அவள் கண், மான் கண் போன்றது; கூந்தல் கருமையானது; அவள் அடி, ஓடி இளைத்த நாயின் நாவு போன்றது; தொடை, யானையின் துதிக்கை போன்றது; கொண்டை, வாழைப்பூப் போன்றது; என்று கூறி மேலும் விரிக்கிறார்.

★ **பாணனைப் பற்றி ஆசிரியர் கூறுவதென்ன?**

பொன்னிழை போலும் நரம்பினையுடைய சிறிய யாழை இடப்பக்கத்தே தழுவி, நைவளம் எனப்படும் **நட்டபாடைப்** பண்ணை இசைக்கிறான். 'வள்ளல் எவரையேனும் காண்போமோ' என எண்ணிக் கொண்டு இருக்கும் போது, நல்லியக் கோடனைப் பாடிப் பரிசில் பெற்று மீளும் பாணனைக் காண்கிறான், என்கிறார் ஆசிரியர்.

★ **பரிசு பெற்றபாணன், பரிசு பெறவிரும்பி நிற்கும் பாணனுக்குக் கூறுவதென்ன?**

"வளமிக்கது, சேரநாடு; பெருமைமிக்கது, பாண்டிய நாடு, செழுமை கொழிப்பது, சோழநாடு; இந்நாடுகளை ஆளும் வேந்தர் கொடைகளும் கொடையாகா வகையில், கொடை வழங்குபவன் நல்லியக் கோடன்" என்று பரிசு பெற்றபாணன் பரிசு பெறச் செல்லும் பாணனுக்குச் சொல்கிறான்.

★ **பாணன் சேரநாட்டின் வளமாகக் கூறுவன எவை?**

"எருமைகள் வயல்களில் உள்ள
குவளை மலர்களைத் தின்னும்;
தின்றபின் மிளகுக் கொடி படர்ந்த பலாமர நிழலில் படுக்கும்;
காட்டு மல்லிகை அதற்கு விரிப்புப் போல் கிடக்கும்;
மஞ்சளின் இலைகள் அதன் முதுகை வருடும்;
இத்தகு வளம் அமைந்தது சேரநாடு;
அதன் தலைநகர் வஞ்சி மாநகரம்"
என்றான்.

★ **பாண்டிய நாட்டின் பெருமையாகப் பரிசு பெற்றபாணன் கூறியதென்ன?**

"கடற்கரை வளமிக்கது பாண்டியனது கொற்கை.

அங்கு அளவு கடந்து விளைவது உப்பு;

உப்பை அள்ளிக் கொண்டு எருதுகள் பூட்டப்பட்ட வண்டிகள் செல்லும், உப்பு விற்கும் உமணர், தம் பிள்ளைகளைப் போல் வளர்த்த குரங்குகள் அவ்வண்டியோடு வரும். உமணர் குழந்தைகள், முத்துமாலைகளை இடுப்பில் அணிந்திருப்பர்; குரங்குகளும் குழந்தைகளும் கிலுகிலுப்பை ஆட்டி விளையாடுவர்; உமணப் பெண்கள், தம் கூந்தலை ஐவகையாகப் பகுத்து முடிந்திருப்பர்" என்று பாண்டிய நாட்டின் சிறப்பாகக் கூறுகிறான்.

★ **சோழநாட்டின் பெருமையாகப் பரிசு பெற்ற பாணன் கூறியதென்ன?**

"மருத வளமிக்கது சோழநாடு; கடம்ப மரங்கள் எங்கும் செறிவாக இருக்கும். நீருண்ணும் துறைகள் பலவாக விளங்கும், தாமரை மலர்களில் வண்டுகள் தம் துணையொடும் கூடி மகிழும்; அங்கே ஆட்சி நடத்துபவன் தூங்கெயில் எறிந்த தொடித் தோட் செம்பியன் என்பான்; அவன் தலைநகர் உறையூர்" - என்கிறான்.

★ **மூவேந்தரையும் பாணன் சுட்டிக் காட்டியது ஏன்?**

**"மூவேந்தர்களாகிய அவர்கள் வழங்கும் கொடைப் பொருள்களிலும் மிகுந்த பொருள்களை வழங்கும் கொடையாளன் நல்லியக் கோடன். ஆதலால், வஞ்சி, கொற்கை, உறையூர் என மூவேந்தர்களைத் தேடி அலையாமல் நல்லியக் கோடனை நாடிச் செல்" என வழிகாட்டிச் சொல்கிறான் பரிசு பெற்றபாணன்.**

★ **வள்ளல்கள் எழுவர் எவர்?**

**பேகன், பாரி, காரி, ஆய், அதியன், நள்ளி, ஓரி - என்பார் வள்ளல்கள் எழுவர் ஆவர்.**

★ **இவ்வள்ளல்கள் எழுவரின் கொடைச் சிறப்புகள் எவை?**

**பேகன்:** வானளாவிய மலைப்பகுதியில் காட்டுமயில் ஆடுதல் கண்டு, அது நடுங்குவதாக எண்ணித் தான் போர்த்திருந்த போர்வையை மயிலுக்குப் போர்த்தியவன்; **பொதினி (பழனி) மலைத்தலைவன்.**

**பாரி:** வண்டுகள் உண்ணுமாறு மலர்ந்து நின்ற முல்லைக்கொடி, ஆடுவது கண்டு அதற்குப் படர் கொம்பு இல்லாமையை எண்ணித் தான் ஏறிவந்த தேரினை அது படர்வதற்கு வழங்கியவன்; **பறம்பு மலைத்தலைவன்.**

**காரி:** இரவலர் வியப்புறுமாறு குதிரையும் தேரும் பொருள்களும் வழங்கிய மலையமான் **திருமுடிக் காரி; முள்ளூர் மன்னன்.**

**ஆய்:** நீலநாகம் ஒன்று கொடுத்த ஆடையை, ஆலமர் செல்வனாம் சிவ பெருமானுக்கு வழங்கிய வள்ளல் **ஆய்; பொதிய மலைத்தலைவன்.**

**அதியன்:** மலைச்சரிவில் கிடைத்த அமிழ்தனைய நெல்லிக்கனியை **ஔவைக்கு** வழங்கியவன் அதியமான்; **தகடூர்த் தலைவன். தகடூர் – இற்றைத் தருமபுரி.**

**நள்ளி:** நட்பாயவர் அனைவருக்கும் வேண்டுவ வேண்டுவ எல்லாம் வழங்கியவன் **நள்ளி; நளிமலை நாடன்.**

**ஓரி:** குறும்பொறைஎன்னும் நாட்டையே கூத்தர்க்கு வழங்கியவன். ஓரிக் குதிரையுடையவன். இவன் பெயர் வல்வில் ஓரி; **கொல்லிமலைத் தலைவன்.**

★ **இவ்வள்ளல்கள் எழுவரையும் ஒருங்கே, பரிசு பெற்றபாணன் சுட்டியது ஏன்? இதனால் மேலும் அறிவதென்ன?**

இவ்வள்ளல்கள் எழுவரும் இப்பொழுது இல்லை; இவர்கள் இருந்தால் தேடத் தக்கவர்களே! இவர்களுள் எவரும் இல்லாமையால், நீ தேடிப் பயன்பெறவேண்டிய வள்ளல் நல்லியக் கோடன் என்பான் ஒருவனேயாம் என்றானாம்.

மேலும், நல்லியக்கோடனும் இந் நத்தத்தனாரும் வள்ளல்கள் எழுவர் காலத்திற்குப் பிற்பட்டவர்கள் என்பதும் விளங்கும்.

**★ நல்லியக் கோடனைப் போல் எழுவர் வள்ளல்களுக்குப் பின் வாழ்ந்த வள்ளல் எவரும் சுட்டப்பட்டனரா? அவர் எவர்?**

எழுவரும் மாய்ந்த பின்னர் வள்ளல் குமணன் சுட்டப்பட்டான். சுட்டியவர் பெருஞ்சித்திரனார் (புறம்.158) குமணன் முதிரமலைத் தலைவன்.

**★ நல்லியக் கோடன் புகழாகப் பாணன் கூறுவன எவை?**

"வள்ளல் எழுவரும் தாங்கிய கொடையைத் தான் ஒருவனாக நின்று இப்பொழுது தாங்குபவன் நல்லியக் கோடன்.

அவனிடத்து நீ செல்வாயாக; அவன் பகையை அழிக்கும் வீறுமிக்கவன்; புலியன்னவன்; ஓவியர் என்றும் குடியைச் சேர்ந்தவன்; மாவிலங்கை என்னும் நகரினன்; மழைபோல் வழங்கும் வண்மையன்" என்று நல்லியக் கோடன் புகழாகப் பாணன் கூறினான்.

**★ கோடனின் பரிசு பெறுமுன் இருந்த தன் நிலையைப் பாணன் எவ்வாறு கூறினான்?**

"கண் திறவாத நாய்க் குட்டிகள், தம் தாயின் மடியில் வாய் வைத்துப் பால் வாரா நிலையில் குரைத்துச் சோர்ந்து கிடந்தன.

கூரை சரிந்ததும் கறையான் ஏறியதும் புழுதியடைந்ததுமாம் சமையல் அடுப்பில் காளான் முளைத்துக் கிடந்தது.

பெரும் பசியினளாய், மெலிந்து தளர்ந்த இடையினளாய் இருந்த பாடினி, நகத்தால் கிள்ளி எடுத்த குப்பைக் கீரையை உப்பில்லாமல் வேக வைத்து, அதனைப் பிறர் கண்டு இகழா வகையில், கதவைச் சார்த்தி எம் கூட்டத்தொடும் உண்ணும் கொடும் பசியராக வாழ்ந்தோம்" என்று பாணன் தன் சுற்றம் பட்ட வறுமையை உரைத்தான்.

★ **கோடனைக் கண்டபின் ஆகிய நலமாகப் பாணன் கூறியதென்ன?**

"நல்லியக் கோடனைக் கண்டபின், எங்களுக்கு என்றும் வறுமை இல்லை என்னுமாறு, யானை தேர் மற்றைப் பொருள்கள் ஆகியவற்றொடும் மீண்டு வருகின்றோம். நீவிரும் சென்று நலம் பெறுவீராக" என்றான் பாணன்.

★ **பரிசு பெற்றபாணன், புதிய பாணனுக்கு, செல்லுமாறு சொல்லிய வழியைக் கூறுக.**

"பாணனே நீநின் கூட்டத்தொடு செல்லும் வழியில், தாழை அன்னம் போலவும், செருந்தி பொன் போலவும், தாமரை செம்மணி போலவும், புன்னை முத்துப் போலவும் பூக்களைப் பூக்கும் கடற்கானல் வழியில் சென்றால், எயிற்பட்டினத்தை அடைவாய்! அங்கே விளங்கும் கிடங்கில் என்னும் ஊர்க் கரசனைப் பாடுவாயானால், நீங்கள் அனைவரும் இனிதுண்டு மகிழக் குழல் மீன் என்னும் மீனுணவை வழங்குவான்! நெய்தல் நில மகளிர் சுவைமிகக் காய்ச்சி வடித்த மதுவை வழங்குவர்," என்றான்.

★ **நெய்தல் வழி பற்றிக் கூறிய பாணன், முல்லை வழி பற்றிக் கூறியவை எவை?**

பாணனே, நெய்தல் நிலம் கடந்து சென்றால், அவரை பவழம் போலவும், காயா, மயில் கழுத்துப் போலவும், காந்தள், கை விரல்கள் போலவும் மலர்ந்து விளங்கும் முல்லை நிலத்தைக் காண்பாய்!

வானவில் வனப்பாகத் தோன்றும்; காட்டருவி கவினுறவிளங்கும் கதிர் மறைவுறும் மாலையில் நீங்கள் வேலூரை அடைவீர். அங்கே, நீங்கள் அனைவரும் பசி நீங்குமாறு, புளிங்கறியொடு கூடிய சோறும், ஆமாவின் வாட்டலும் முல்லை வாணராம் எயிற்றியர் வழங்குவர்! என்றான்.

★ **மருதநில வளமாகப் பாணன் கூறுவன எவை?**

"முல்லை நிலத்தைக் கடந்தால் மருத நிலம் தோன்றும்; காஞ்சி மரத்தின் கிளைகளில் இருக்கும் பொன்போலும் வாயும், நீலமணி போலும் நிறமும் உடைய சிச்சிலிப் பறவை, நீருள் மூழ்கி மீன்களைப் பற்றி எடுக்கும். அதன் கால்கள் பட்டு அங்குள்ள தாமரைப் பூக்களின் இதழ்கள் கிழியும். அதனால், அத்தேனை நீலநிறமும் சிவந்த கண்களுடைய வண்டுகள் உண்ணும். அக்காட்சி திங்களைப் பாம்பு பற்றுதல் போன்றதோற்றம் தரும். அத்தகைய வளமான வயற்பகுதியில் உள்ளது ஆமூர் ஆகும்.

ஆமூர் காவல் மிக்கது; பெரிய பெரிய வீடுகளையுடையது. அந்தணர் குடியிருப்புகளையும் கொண்டது. ஆங்குள்ள உழத்தியர் தம்மக்களை விடுத்து உங்களை முறைசொல்லி அழைத்து அரிசிச் சோறும், நண்டும் பீர்க்கங்காயும் கலந்த அவியலும் படைத்து உண்ணச் செய்வர்" என்றான்.

★ **நல்லியக் கோடன் இருக்கும் மூதூர் பற்றிப் பரிசு பெற்றபாணன் கூறியதென்ன?**

நல்லியக் கோடன் மூதூர், மேல் எழும் தீ, காற்றால் சாய்ந்து எரிவது போன்றநாவையும், வெள்ளையாட்டுக் குட்டியின் அசைக்கின்றகாது போன்றகாதும் உடைய பேய் சிரிக்கின்றவாயிலுள்ள பல்லைப் போன்றதும், போர்க்களத்தில் பிணங்களை எற்றித் தள்ளி வரும் யானையின் கால் நகம் போன்றதும் ஆகிய சிவந்த தெருப் புழுதியை, யானையின் மதநீர் அடக்கும். எப்பொழுதும் விழா நகராகத் திகழும்; அவ்வூர் மிகத் தொலைவில் உள்ளது அன்று; அண்மையில் உள்ளதேயாம்.

அரண்மனையின் வாயில், பாணர் கூத்தர் புலவர் அந்தணர் ஆயோர்க்கு எப்பொழுதும் அடைத்தல் இல்லாதது. மற்றையோர் புக அரிதாய் அடைக்கப்பட்டிருக்கும். நீங்கள் எத்தடையும் இல்லாமல் அவ்வரண் மனையுள் புகலாம்" என்றான்.

★ **நல்லியக்கோடன் பண்பு நலங்களாக அறிவன எவை?**

"செய்ந் நன்றி அறிதலுக்கு இலக்கண மானவன்;
தகுதியில்லார் உறவை அறவே தவிர்த்தவன்;
எப்பொழுதும் தக்கோர்க்கு இனிய முகத்தையுடைவன்;
இனிய செயல்களையே செய்பவன்;
அறிய வேண்டியவற்றைஅறிந்தவர் பாராட்டுக்கு உரியவன்;
அஞ்சி வந்தவர்க்கு அடைக்கலம் தருபவன்;
கொடிய சினம் இல்லாதவன்;
சிறந்த படையுள் தலைப்பட்டு நிற்பவன்;
படை அஞ்சினாலும் அவர்களுக்கு வீறுகாட்டித்
தான் ஒருவனாய்ப் பகைப் படையை வாட்டுபவன்;
வீரர்கள் புகழத் தான் எண்ணியதை முடிப்பவன்;
ஒரு சார்பாக நின்று சால்பு இழவாதவன்;
அறிவால் மிக்கவர் சூழலில் இருப்பவன்;
அவ்வவர் தகுதியறிந்து தகத்தகக் கொடை வழங்குபவன்;
பரிசில் வாழ்வினராகிய பாணர் கூத்தர் புலமையர் பாராட்டப்,
பலவாம் விண்மீன்களுக்கு இடையே தோன்றும்
முழுமதி போன்றவன்"

என்பவற்றை நல்லியக் கோடன் பண்புகளாகச் சிறுபாணாற்றுப் படையால் அறிகிறோம்.

★ **சிறுபாணனின் யாழைப் பற்றியும், கோடனிடம் சொல்ல வேண்டியவை பற்றியும் பரிசு பெற்றபாணன் கூறுவன எவை?**

யாழைப் பற்றிக் கூறுவன:

"குரங்கு பாம்பு ஒன்றன் தலையை இறுகப் பற்றினால் அப்பாம்பு வலிந்தும் மெலிந்தும் குரங்கின் கையைச் சுற்றுவது போல யாழ்த்தண்டில் நெகிழவும் இறுகவும் பற்றிய நரம்பும், வார்க் கட்டும், குமிழங்கனி போன்றசிவந்த போர்வையும், அமிழ்து பொதித்து வழிவது போன்று இசைப்பதும் உடைய யாழ்" என்று யாழைப் பற்றிக் கூறுகிறான்.

★ **கோடனிடம் சொல்ல வேண்டியவை பற்றிக் கூறுவன எவை?**

"நீ பண்ணிசை முறையொடு பயின்றவகையில் இசை மீட்டி,
பேரறிவினர்க்கு வணங்கும் கையனே,
வீரர்க்கு மலர்ந்த மார்புடையனே,
ஏர்க்களத்தராம் உழவர்க்கு அருள் செய்பவனே,
பகைவர்க்கு வெதுப்புடைய வேலை ஏந்தியவனே"

என்று கோடனிடம் சொல்ல வேண்டியவற்றைச் சொல்கிறான்.

★ **பாணன் கோடனைப் பாடிய அளவில் அவன் செய்வனவாக எவற்றைக் கூறுகிறான்?**

பாணன் நல்லியக் கோடனைப் பாடிய அளவில், "மூங்கிலின் உள் தோலாம் சொலித்துப் போன்றதுாய வெண்ணிறஉடை வழங்குவான். பாம்பு சினந்து மேலெழுந்தாற் போன்றுவெறியேறும் மதுவை வழங்குவான். அருச்சுனனுக்கு மூத்தவனாம் வீமன் என்பான் சமைக்கும் பக்குவமான உணவு போல ஆக்கிய உணவு வகைகளைக் கதிரொளியை விஞ்சும் கலங்களில் வழங்குவான்; அவ்வுணவையும் தான் முன்னே நின்று, ஊட்டும் வகையால் ஊட்டி உண்ணச் செய்வான். பகைவரை அழித்து அள்ளிக் கொண்டு வரப்பட்ட அரிய பெரிய பொருள்களை யெல்லாம், காற்றென விரைந்து செல்லும் குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் ஏற்றி வைத்துக் காலத் தாழ்வு இல்லாமல் உடனே உங்களை ஊர்க்கு விடுத்து வைப்பான்; ஆதலால் நல்லியக் கோடனை நோக்கிச் செல்லும் செலவை உடனே கொள்வாயாக" எனக் கூறினான்.

★ **மதுரையின் மாண்பாக நத்தத்தனார்க்குத் தோன்றிய சிறப்பு யாது? ஏன்?**

மதுரையின் சிறப்பாக,
"தமிழ்நிலைபெற்றதாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை"
என்கிறார் (66-67)

மூவேந்தரும் தமிழர் எனினும் தமிழ் வளர்த்தவர் தாம் எனினும், தமிழுக்கெனப் புலவர்களைக் கூட்டிச் சங்கம் என ஒன்றை அமைத்துக் காலமெல்லாம் வளர்த்தவர்கள் பாண்டியர்கள். ஆதலால் அவர்கள் தலைநகரைக் கூறும்போது 'தமிழ் நிலை பெற்றமதுரை' என்றும் அச்சங்கத்தைத் தொடர்ந்து காப்பதன் அருமை கருதித் 'தாங்கரு மரபின்' என்றும், மனமகிழ்விலே எப்பொழுதும் குளுமையும் நறுமையும் அடையும் தெருக்களை உடையதாகலின், 'மகிழ்நனை மறுகு' என்றும் நயமிகச் சிறப்பித்துக் கூறினாராம்!

**★ நல்லியக்கோடன் விருந்தோம்பல் சிறப்புக் கூறும் வகையால் புலவர் தம் புலமையை எவ்வாறு வெளிப் படுத்துகிறார்?**

நல்லியக்கோடன் ஒளிமிக்க வெண் பொற்றட்டத்தில் உணவு வழங்கினான். அது பெரியது; பேரொளி உடையது. அதனைச் சூழவும் ஒளியுடைய சிறிய தட்டங்களை வைத்துத் தொடுகறி விடுகறி முதலியன வைத்தான். அக்காட்சி, அவரை மண்ணில் இருந்தாலும் விண்ணை நோக்குமாறு செய்துவிட்டது.

கதிரோன் ஆகிய நாண் மீனைச் சுற்றிலும், அமைந்த திங்கள் செவ்வாய் முதலிய கோள் மீன்கள் போலத் தோன்றியது. அதனால்,

“வாள்நிறவிசும்பிற் கோள்மீன் சூழ்ந்த
விளங்குகதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து
விளங்கு பொற் கலம்”

என்றார். உலகம் தட்டையானது என்று உலகோர் எண்ணிக் கொண்டிருந்த காலத்தில் உலகம் உருண்டையானது என்றும், அது வலமாகச் சுழல்வது என்றும், அதன் ஒளியைக் கொண்டு திங்கள் செவ்வாய் முதலிய கோள் மீன்கள் ஒளி செய்வன என்றும் கூறிய அறிவியல் உண்மை நம்மை நிமிரச் செய்யும் பெருமையும் அருமையும் உடையதாம். அத்தகைய அறிவியல் திறம் படைத்த இனம் இன்று வரை கண்மூடித் தனத்தின் நாற்றங்காலாகக் கிடக்கிறதே! அதனை மீட்டெடுக்கும் கடமை நமக்கு இல்லையா என எண்ணச் செய்யவில்லையே என்னும் தலைக்குனிவையும் உண்டாக்கத் தவறவில்லை என்பதாம். எவ்வளவு அரிய அறிவியலை எளிமையாகக் கூறிவிடுகிறார் நத்தத்தர்! வியக்க வியக்க வியப்பில்லையா?

★ **நத்தத்தனார் காலத்திலேயே பாரதக் கதை தமிழ் நாட்டில் வழங்கத் தொடங்கிய சான்றாக அறிவதென்ன?**

காட்டை எரியூட்டிய அருச்சுனனுக்கு மூத்தவனாம் வீமன் சமையல் தேர்ச்சி மிக்கவனாகத் திகழ்ந்தானாம். அதனால் அவன் செய்த சமையல் பாகத்திற்கு 'வீமபாகம்' எனப் பெயர் ஏற்பட்டதாம். அப்பாகம் போல அமைக்கப்பட்ட உணவை நல்லியக் கோடன் வழங்கினான் என்பதால் அறியலாம் (238-241).

★ **நத்தத்தனார் நயமிக்க சொற்கள் சிலவற்றைப் பயன்படுத்தியுள்ளார். அவற்றைச் சுட்டிக்காட்டி விளக்குக.**

அவைப்பு = அரிசியைக் குற்றித் தீட்டுதலை அவைப்பு மாண் அரிசி என்கிறார்.

அறல் = நீர் மேடுபள்ளம் பட மணலை அறுத்துச் செல்லுங்கால் மேடு பள்ளங்களில் கிடக்கும் மணலை 'அறல்' என்கிறார்.

ஆரம் = இதனை, நறுமண மிக்க சந்தனத்திற்கும், ஆய்ந்து தொடுக்கப்பட்ட முத்துமாலைக்கும் பயன்படுத்துகிறார்.

ஈகைச் செந்நுகம் = ஈகையைப் பொருள் ஏற்றப்பட்ட வண்டியாகச் சொல்வது உருவக நயமிக்கதாம். நுகம் என்பது வண்டியை இழுக்கப் பூட்டப்படும் நுகக்கோல்; அது வண்டியைக் குறித்தது. ஏழுபேர் இழுத்த கொடையாம் பார வண்டியை ஒருவனே இழுக்கும் பெருமையும் பேறும் சொல்கிறார் (113).

உமட்டியர் = உமணப் பெண்டிரை உமட்டியர் என்று பெண் பாலாக்குகிறார். உமட்டியர் உப்பு வணிக மகளிர் (60).

உழவர் தங்கை = உழத்திப் பெண்டிரை உழத்தியர் என்னாமல் உழவர் தங்கை என்பது பண்பாட்டு நயமிக்கதாம். அவள் உழவர் மனைவியர் எனினும் எமக்குத் தங்கை போல்வாள். ஆதலால் அவர்கள் மக்கள், செல்லும் பாணர்களை மாமன், மாமி என முறைசொல்லி அழைத்து விருந்தூட்டுவர் என்பதாம்.(190)

ஒழுகை = வண்டிகள் வரிசையாகச் செல்லும் முறைமையால் ஒழுகை எனப்பட்ட தாம். அரிய ஆட்சி அஃதாம்(55).

காளாம்பி = காளான் என்பதைக் காளாம்பி என்பது பழ வழக்கு என அறியலாம். வெள்ளை வெளோ் எனத் தோன்றினாலும் அன்றேகருநிறமாகி வதங்கிப் போவதால் காளாம்பி என்றாராம்(134).

கிலுகிலி = கிலுகிலுப்பை என நாம் இந்நாள் வழங்குவது அந்நாள் 'கிலுகிலி' எனப்பட்டது என்பதை அறியலாம். குரங்கும் குழந்தைகளும் கூடி விளையாடல் அச்சமில்லாமை. அச்சப்படுத்தாமை ஆகிய இரண்டும் இருபாலும் அமைந்திருந்த அருமை விளக்குவதாம்(61).

செம்மல் = செதும்பிக் கிடக்கும் என்னும் பொருளமைந்த இச்சொல் இக்கால் கலை, அறிவு, பண்பு நிரம்பினார்க்கு 'விருது' வழங்கும் கலைச்சொல்லாக விளங்குவது எண்ணத்தக்கது(5).

ஓவம் = ஓவியம், அரியது. இன்றும் மக்கள் வழக்கில், 'பெரிய ஓவமாக்கும் அவள்' என்று வழங்குகின்றது. 'ஓவம்' இலக்கிய வழக்கு மிக்கதுமாம்.

## மூதறிஞர்
# இரா.இளங்குமரனாரின்

## பழந்தமிழ் நூல்கள் வெளிவந்த பட்டியல்

1. தொல்காப்பியம்

2. திருக்குறள்

3.திருமுருகாற்றுப்படை

4. பொருநர் ஆற்றுப்படை

5. சிறுபாணாற்றுப்படை

# மூதறிஞர்
# இரா.இளங்குமரனாரின்

## பழந்தமிழ் நூல்கள் வெளிவர உள்ள பட்டியல்

6. பெரும்பாணாற்றுப்படை

7. முல்லைப்பாட்டு

8. மதுரைக் காஞ்சி

9. நெடுநல்வாடை

10. குறிஞ்சிப்பாட்டு


11. பட்டினப்பாலை

12. மலைபடுகடாம்

விலை ரூ.15 ஆக்கம் : பெரியார்

அறிமுக நூல் – 5

# சிறுபாணாற்றுப்படை



இரா.இளங்குமரனார்